




ஓலை 123 | ஓசை 246 | மே 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## 'கவிமணி' தேசிக விநாயகம்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு

## பொருள்

தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்!

பா வகை:இணைக்குறள் ஆசிரியப்பா




உள்ளம் வேர்த்தும் உடலும் வேர்த்தே
துள்ளிக் கடலும்
அள்ளி ஈயும்
தள்ளிடா உழைப்பின் கடலால்
துள்ளி உடலும் வேர்க்கும்
கள்ள மின்றி மேகம் உழைக்குமே!

மலையும் வேர்த்து மாண்பாய் உழைக்க
அலையிலா அருவிநீர்
நிலையாய் ஆறாய்
கலைநயத் தோடே இருகரை
தலையில் பூவும் குடியே
விலையிலா நீராம் செல்வம்
நிலைக்க அல்லும் பகலும் உழைக்குமே!

அல்லில் நிலவும் பகலில் கதிரும்
எல்லை யின்றி
இல்லை எனாமல்
நல்லொளி உழைப்பால் ஈயும்,
பொல்லாச் சோம்பல் முறிக்கும்;
எல்லாம் அறிந்த மாந்தர் சோம்பரே!

இயற்கை யாவும் இனிதாய் உழைத்திட
இயல்பை மறந்தே
செயற்கை யாக
அயர்ந்து சோம்பலில் உறங்கித்
துயரென துடித்தே வீழ்கிறார்.
அயரா துழைப்போர் அடைவர் மகிழ்வே!

ஓரறி வுள்ள உயிரினம் முதலாய்
சீரறிந் துழைத்தே
பேரறி வுடனே
ஆரமாய் இன்பம் அடையும்,
ஆறறி வுடைய மாந்தர்
சீரழிந் திடவே சோம்பல் கொண்டரே!




### இலக்கணக் குறிப்பு:

ஆசிரியப்பாவில் இடையிடையே ஈரசைக் கொண்ட குறளடியும் முச்சீர் கொண்ட சிந்தடியும் கலந்து வருவது இணைக் குறளாசிரியப்பாவாகும். முதலடியும் ஈற்றடியும் நாற் சீரடியாக வரும். தளை பார்க்கத் தேவையில்லை ஒரு பாட்டின் எல்லா அடியும் ஒரெதுகைப் பெற்று வரும். முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் மோனை அமைதல் வேண்டும்.

## இன்னிசை சிந்தியல் வெண்பா

ஆக்கத்தைத் தேடியே
ஆணவமாய் வாழாமல்
ஊக்கமாய் நாளும் உழைத்ததைமண்ணுள்ளே
தேக்காமல் ஈதல் தெளிவு.

## நேரிசை சிந்தியல் வெண்பா.

அன்புடன் நோக்கி
அருளுடன் ஈந்திடக்
கன்னலாய் பேசியே கன்றாமல்-அன்றாடம்
தன்மையாய் வாழ்தல் தலை.



கவிஞர் செ. கலைவாணி

# கூடா ஒழுக்கம்

## பா வகை : நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா



*தரவு*
குலத்தினிலே சிறந்திடவே குணத்துடனே வாழ்ந்திடுவாய்
புலத்தினையே பொறுத்திட்டே புவியினிலே உறைந்திடுவாய்
நலத்துடனே வாழ்ந்திடவே நடந்திடுவாய் நன்னெறியில்
உலகினிலே ஒழுக்கமென்றும் உயிராகும் அறிவாயோ?

தாழிசை

ஒழுக்கத்தை உயிரெனவே உனக்குள்ளே வளர்த்திட்டால்
இழுக்கில்லா வாழ்வையேநீ இனிமையாக வாழ்ந்திடலாம்

உறையிலிட்ட கத்தியெனவே உறங்கியேநீ கிடக்காமல்
முறைகெட்ட வழியென்றால் முடித்துமேநீ அழித்திடுவாய்

அழிழ்தெனவே ஒழுக்கத்தை அகற்றிடாதே அணைத்திருப்பாய்
அமிலமெனவே தீவினையை அகற்றிடுவாய் வாழ்வினிலே

தனிச்சொல் ஆதலால்

சுரிதகம்

குன்றா திருக்க குவலயம் காக்கவே
என்றும் ஒழுக்கமே ஏற்றிட
குன்றாய் உயர்வாய் குலத்திலே

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# சுதந்திரம்

அன்றொரு நாள்
நான் வானத்தை அளந்தேன்.
அப்போது நான் பறவையாய்
இருந்தேன்.
எனக்குச் சிறகுகள் இருந்தன.
மீண்டும் எனக்குச் சிறகுகள் முளைக்கும்.
நான் பறவையாவேன்.
அப்போதும் பறந்து நான்
வானத்தை அளப்பேன்.
எக் கட்டளையுமின்றி
எல்லைகளைக் கடந்து
கண்டம் தாண்டுவேன்
பெருங்கடலையும் மகிழ்வாய்க்
கடந்து போவேன்.
இந்தப் பூமியை ஆகாயத்திலிருந்து
தரிசிப்பேன் ரசிப்பேன்.
உங்கள் பார்வையிலிருந்து
விலகிப் புள்ளியாகி மறைவேன்.
மேகங்களோடு பயணிப்பேன்
எத்தடையுமின்றி நிலவில் படுத்துறங்குவேன்.
விண்மீன் பூச்சிகளை தேடிப்பிடித்து
உண்டு மகிழ்வேன்.
அளவில்லா ஆனந்தம்
கொண்டிருப்பேன்.
அப்போது
மனிதர்களைப் போலல்லாது
நானொரு சுதந்திரப் பறவையாய்
இருந்து கொண்டிருப்பேன்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# உழைப்பே உயர்வு தரும்



வாழ்க்கையே வரமே
உழைப்பே செல்வமே

வெற்றிக்கொடி கட்டிட
சிகரங்கள் தாண்டுவோம்.

எதிர்வரும் தடைகளைத்
தகர்த்தே.

மேடுபள்ளங்களைத்
எதிர்கொண்டே உலகின்
உச்சங்களைக் கண்டிட.

மனச்சவால்களின்
முனகல்களை தீயிட்டு
எரித்திட்டே.

மகிழ்ச்சி பொங்கும்
மனதின் நிலைகளோடே.

உலகுக்கே காட்டிடுவோம்
உழைப்பே உயர்வு.

கவிஞர் இராஜகை நிலவன்

## 7. கனகமாலையார் இலம்பகம்

தோழர்களைக் கண்ட சீவகன் மகிழ்ந்தான்
வாழ்நாள் நண்பர்கள் அல்லவா அவர்கள்
தாழ்மையோடு கட்டித் தழுவினார்கள் நண்பர்கள்
இழந்ததை மீட்கும் கடமை இருக்கிறதே .

கட்டியங்ககாரன் மகனைக் கொன்றதாக் கேட்டாள்
தட்டிக் கேட்க இனி யாரும் இல்லையே
தட்டிப்பறித்த அரசு அவனுக்கே சொந்தமா?
மீட்டுப் பெறுவது இனி எப்படி ?

வரும் வழியில் விசயையை சந்தித்தார்கள்
கருமமே கண்ணாக தவம் இருக்கிறாள்
திரும்ப சீவகன் அரியணை ஏறவேண்டும்
தருமத்தின் வெற்றிக்காக காத்து இருக்கிறாள்

உடனே தங்களுடன் வரும்படி அழைத்தனர்
தடம் மாறி வந்தது எப்படி
தடமித்த அரசன் ஆதரவு தந்தது
திடமாக கனகமாலை மணந்தது கூறினான்
( தடமித்தன்: அரசன் பெயர் )
அரசனிடம் சென்றான் உண்மையைக் கூற
சிரம் தாழ்த்தி மன்னிப்புக் கோரினான்
தர்பாரில் நண்பர்களை அறிமுகம் செய்தான்
முரண்படாமல் நடந்ததை அப்படியே சொன்னான்

என் சூழ்நிலை நாடோடியாக அலைகிறேன்
என் கடமைகள் ஆற்றவேண்டியவை நிறைய
என் நேரம் காலம் வரும்வரை
பொறுமை காக்க ஆசான் உத்தரவு .

முற்றிலும் அறிந்தான் சீவகனை மன்னன்
பற்றுதலோடு அவன் பிழை மன்னித்தான்
சற்றும் மாறாமல் விடை கொடுத்தான்
உற்றவனைப் பிரிவதில் கண் கலங்கினான்

அடுத்தது கனகமாலையிடம் உள்ளதைக் கூறினான்
எடுத்து சொன்னதில் உண்மை உணர்ந்தாள்
தடுத்து நிறுத்தாமல் வாழ்த்தி அனுப்பினாள்
அடுத்து தோழர்களுடன் நாடு திரும்பினான்

கனகமாலையார் இலம்பகம் முற்றும் .
ஆகக் கவி: 1888.



தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# பெருந்தகை ஆகுக

அறமொன்றி வாழப் பழகிக் கொள்.
அல்லல் அகற்ற கசடறக் கல்.
அகம் நனைய அன்பை பெருக்கு.

தீதின்றி பொருள் செய்க
திறனறிந்து வினையாற்றுக
தென்மொழி வெண்பாவை
இறுகப் பற்றி தழைத்தோங்குக.
தமிழால் நெஞ்சை நிரப்புக
தகைசால் பெருந்தகை ஆகுக.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# ஐம்பால்

மானிடர் தலைக்கு இயற்கை சூட்டிய
அழகுக் கிரீடம் தலைமுடியாம்
இருபாலருக்கும் ஈர்க்கும் அழகு முடியெனினும்
பெண்பாலருக்கு அள்ளித்தரும் அழகொடு மங்கலம்
தலைவிரி கோலம் பாண்டியன் அவையில்
கண்ணகி கூந்தலும் சினந்து ஆடியது !
துரியனால் அவிழ்ந்த பாஞ்சாலி கூந்தல்
துரியனை முடித்தபின்னே தலையில் முடிந்தது

குழல், அளகம், கொண்டை பனிச்சை, துஞ்சை எனக்
கூந்தலை ஐவகையில் முடித்தலே "ஐம்பால்'
செயறகை அழகுவகை என்பார் சிலர் ;
கூந்தலின் இயற்கை பண்பு நலம் என்பார் சிலர்
வேண்டுதல் முடித்து மழித்து சந்தனம் பூச்சோடு
குழந்தை மொட்டை அழகு
கிருஷ்ணன் கொண்டை ; கையில் புல்லாங்குழல் ;
தத்தி நடக்கும் சிறுமி அழகு

இரட்டைசடையில் பள்ளிசெல்லும்
சிறுமியர் கூட்டம் அழகு
பருவ மங்கை ஒற்றை சடையில்
ஒய்யாரமாய் நடப்பது அழகு
ஆறடிக் கூந்தல் அழகு ;
அளவோடு வெட்டிய நேர்முடிக் கற்றையும் அழகு
நடு வயதுப் பெண்டிர் பூச்சுற்றிய
அழகுக் கொண்டை அழகு

சட்டகத்தில் தாத்தாவோட நிற்கும்
கொப்புக் கொண்டை பாட்டி அழகு
கேரளா மகளிர் ஈரம் காயாத
சுருண்டமுடி அழகு
முன்சிகையில் வெள்ளைக்கீற்று
இந்திராகாந்தி அம்மை தலைமுடி அழகு !
வயற்காட்டில் வியர்வை சிந்தும்
பெண்டிர் குடுமிக் கொண்டை அழகோ அழகு !



கவிஞர் ஆ. சீ. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# மனிதன் மாறிவிட்டான்

முன்பு மூன்றெழுத்தில்
உழன்றது இவ்வுலகம்
அறியாதவர்க்கும் கூட
ஆபத்தில் உதவினான் மனிதன்
முற்றிவிட்டது கலியென
முற்றுமறிந்தவர் உரைக்க
மனிதன் மாறிவிட்டான்
தாய்பாலுக்கும் தடை
தாய்மைக்கும் தடை எனத்
தற்குறியாய் எண்ணங்கள்
சக உதிரத்தில் பிறந்தவன்
சங்கடப்படுகையிலும்
சரேலென விலகிடும்
சகோதரங்கள்.
பணப் பிள்ளை சொல்
வேதமாகிடும் பெற்றோர்
உன்னில் சிறந்தவன் நான்
உயர்ந்திடாதே ஒருபோதுமென
உத்தம எண்ண உடன்பிறப்புகள்
இப்போதும் கூட மூன்றெழுத்தில்
இயங்குகிறது
ஆனால்
பணம் என்ற மூன்றெழுத்தில்.



கவிஞர் ஷீலாதேவி அருணாசலம், நாகர்கோவில்

# எதிர்பார்ப்பில் சன்னலோர இருக்கை

காற்று உன்னைத்தொட அனுமதிக்கிறாய்
என்று தெரிந்துகொண்டேன்
தென்றலாய் மாறி
கன்னம் வருடி
தாலாட்டிட திட்டம் வகுத்து
இதோ வந்துகொண்டு இருக்கிறேன்
எனக்காக இதைமட்டும் செய்திடு
சன்னலோர இருக்கையினை
தேர்ந்தெடு
சன்னலை திறந்தே வைத்திடு.



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# தண்ணீரில் கண்ணீராகும் வாழ்க்கை

உழவன் வாழ்வில் உலகமே உள்ளதே
மழையில்லை என்றால் விவசாயம் ஏது
வான் மகளை தேடி ஏங்குகிறேன்
பயிர்கள் எல்லாம் காய்ந்து போச்சு
குடும்பமே கவலையில் மூழ்கியது
மேகம் கருக்க பறவைகள் பறக்க
சிரித்தது மழை கொட்டி தீர்த்தது
பயிரும் விளைந்தது அறுவடையும் முடிந்தது



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# இரவு

**அதிகாரம் : 106**



இரந்துகேட்க தகுதியுடையோரை
இரத்தல்நலம் அக்கணம்.
இல்லையென்றவர் கைவிரித்திடின்
அவர்க்குப் பழியே.

இரந்தபொருள் துன்பமின்றி
கிடைத்திடின் அஃது.
உலகில் இரப்போர்க்கெல்லாம்
இன்பந்தரும் காரணமாம்.

ஒளிவில்லா நெஞ்சத்தொடு
கடமையுணர்வுங் கொண்டோரிடம்.
ஒருபொருள் இரந்துநிற்றலும்
அழகுடைத் தன்மையாம்.

தம்பொருளை ஒளித்துவைக்க
கனவிலும் நினையாதோரிடத்து.
இரந்துநிற்றல் வறியார்க்கு
ஈதலைப்போல் சிறப்பாம்.

தமக்குள்ளதை இல்லையென
ஒளித்துக்கூறா நன்மக்களே.
உயிர்காக்கும் பொருட்டாளராய்
உலகிருக்கும் சிலராம்.

உள்ளதை ஒளித்துவைக்கும்
வறிநிலை இல்லார்காணின்.
இரப்போரின் வறுமைத்துன்பம்
ஒருசேர அவர்விட்டொழியுமாம்.

இகழ்ந்து எள்ளாது
ஈவோர் காண்கையில்.
இரப்போருள்ளம் மகிழ்ச்சிபொங்கி
உள்ளுக்குள்ளே உவகையடையுமாம்.

இரப்போர் இல்லையாகில்
இரக்கமனத்தார் வாழுலகம்.
மரப்பாவையின் கயிற்றால்
கட்டப்பட்டாடினார் போன்றதாம்.

தமக்குப் பொருள்வேண்டி
இரந்துநிற்பார் இல்லையெனில்.
கொடுக்கவிழைவோர்க் கிவ்வுலகில்
எப்புகழ் உண்டாகும்?

இரப்பவன் ஈயாதோரிடத்து
சினங்கொள்ளாதிருத்தல் நலம்.
பொருள்தானே வந்துதவாதென்று
ஒளித்தானடைவறுமையே அறிவுபுகட்டும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# உன் நினைவின் நிழலாய் நான்

அன்பான சொந்தமே
விலகிடாத பந்தமே
உனது எண்ணத்தில்
கலந்திட்டேன் நானே

உனது இதயத்துடிப்பில்
எனதுயிரும் வாழ்கிறதே
ஒன்றானது உள்ளங்கள்
பிரிவேதுமில்லாத உணர்வுகள்

உரிமையில் இணைந்தே
உறவாகி வந்தவளே
கணப்பொழுதும் மறப்பதில்லை
உன்னை அன்பே

கனிவான பார்வையில்
துயரங்கள் தீர்ந்ததே
இதமான அரவணைப்பில்
மேனியும் சிலிர்க்குதே

இதமான துயிலலில்
இனிமையும் சேர்ந்ததே
இரவுப் பொழுதில்
இளமையின் கனவுகளே

ஏகாந்தம் போனது
ஏந்திழையின் வரவிலே
உன் நினைவின்
நிழலாய் நான் தொடர்ந்திடுவேனே

விட்டு விலகுவது
இல்லை என்றுமே
அகவை கூடினாலும்
அன்பது பெருகிடுமே



மயங்கினேன் உன்னிடமே
இசைத்திடு என்னையே
விழிகளின் சங்கமத்தில்
இளமை ராகமே

இன்பத்தின் இலக்கணமே
இலக்கியத் தென்றலானவளே
இடையசைவில் இசைந்தேன்
இன்பத்தில் மிதந்தேன்

இன்னிசை தேவதையே
விண்ணுலக காரிகையே
பிரம்மன் வரைந்திட்ட
வண்ணமயிலான ஓவியமே

வசந்தமாய் வந்திடுவாயே
வாழ்வது இனித்திடவே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# கரையைத் தேடும் ஓடம்



நீல வண்ண கடலில்
கரைகள் தேடும் மீனவர் இனம்
கண்ணீரின் கவலைகளாய்

அலைகளின் வேகத்தில்
மீனவரின் வாழ்க்கை படகு
சோகத்தின் ஊர்வலங்களாய்

உப்பு தண்ணீரில் வாழ்வைத்
தேடும் கடல் மக்களின்
சோகங்கள் தொடர்கதைகளாய்

இவர்களின் ஏக்கங்கள் நகரத்தின்
பார்வையில் அடுப்பில் வெந்து
தணியும் மீன்களாய்

குடும்பம் மறந்து கரைகளை
துறந்து நாள்தோறும் தண்ணீரில்
ஈரமாய் இவர்கள் வாழ்க்கை

அலைகளின் மடியில்
அசைந்தாடும் தண்ணீரில்
என்றும் கரை சேராத
ஓடங்களாய் இவர்கள்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# மழைக்கால கவிதை

வானம் இன்று காதலிக்கிறது
துளிகள் சொருகி நெஞ்சை நனைக்கிறது.

மழை வந்தால் நினைவுகள் விழும்
பழைய பாடல்கள் உள்ளத்தை எழும்.

தடம் விட்டுப் போன காலங்கள்
படிகட்டி நிற்கின்றன தண்ணீரில்.

சின்னச் சின்ன கனவுகள்
தடாகத்தில் துளியாக விழும்.



கவிஞர் ம. ஹரீஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

# நினைவிருக்கும் வரை



தொலைதூரம் என்னை விட்டு நீ போனாலும்
தொடும் தூரம் ஆனாய் உன் நினைவாலே.

நீ விட்டுச்சென்ற கைக்குட்டையில்
உன் வாசத்தை வடிகட்டி வைத்திருக்கின்றேன்.

முடமாகி போய்விடும் மூளை செல்களும்
உன் நினைவுகள் அற்ற நாள் வரும் வேளை

உன் மௌனம் என்னை பேச வைத்துக் கொண்டே இருக்கிறது
உன்னை பற்றியும் உன் நினைவுகள் பற்றியும்.

நினைவுகளால் நீந்தும் மனம் இருப்பதனாலேயே
நிசம் முடங்கி விடாமல் நித்தம் நகர்கிறது
நீ விட்டுச் சென்ற நினைவுகளாலே

எப்போது பார்ப்போம் என்று ஏங்கிய காலங்கள் சென்று
ஏன் பார்க்க வேண்டும் என்று எதிராய் கேட்கும் காலமாய்
எது மாற்றியது நம் சூழல்?

மயக்கி சென்றவளே மறுபடியும் வருவாயா
மருகியே நிற்கின்றேன் மணம் கூட வருவாயோ
மண்டியிட்டு தாழ்கிறேன் மன்னித்து ஏற்பாயோ?

உன் நினைவுகளுடனே ஓடிக் கொண்டிருக்கிறேன்
நித்தம் நீ தந்த கைக்கடிகாரத்தில்

உன்னை சேர துடிக்கும் ஒவ்வொரு மணி நேரமும்
வினாடி முள் கொண்டு என்னை விலக்கி வைக்கிறாய்.

கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# பெண்கள்குல ஏறு மணலூர் மணியம்மா



மணலூர் ஈந்த வேங்கை
மானந்தான் காத்த மங்கை
வாழ்வளிக்க வந்த செங்கை
வாலாம்பாள் என்ற நங்கை

பால்யத்திலே தம்பதி ஆனாய்
பாதியிலே பதியிழந்து போனாய்
பாரதத்தின் செழிப்புக்காய் நீயும்
துன்பங்கள் யாவும் துறந்தாய்

ஈரமனமும் கூர்குணமும் கொண்டே
ஏற்றம் காணவே உழைத்தாய்
எதிரிகள் நெஞ்சிலே நீயும்
செழுந்தீயினை நாளுமே விதைத்தாய்

கைம்பெண் மரபைத் தகர்த்து
களப்போராட்டம் கண்ட அரிமா
புடவைக்கு விடையது கொடுத்து
சீர்திருத்தம் செய்த எழுநா

ஆணாதிக்க வழமைகள் எதிர்த்து
பெண்ணுரிமைக் கொடியும் பிடித்தாய்
வேட்டி அணிந்த பெண்ணாய்
விடுதலைப் போரினில் குதித்தாய்

தீண்டாமைக்குத் தீயுமே வைத்து
சுயமரியாதையும் தேடிநீ தந்தாய்
விவசாயிகளின் விடிவெள்ளியாய்த் தோன்றி
விழிநீரையும் மணிநீ துடைத்தாய்

சமூகத் துயரங்கள் கண்டு
அவை சாய்க்கவே உளமும் கொண்டாய்
வெகுசனப் போராளியாய் மாறி
வேதனைகள் எல்லாம் தீர்த்தாய்

பெண்ணடிமை மண்ணடிமை அகற்ற
பேரொளியாய் எழுந்த கணைநீ
பிதற்றுவார் கொட்டகம் அடக்க
பாய்ந்து வந்த வீராங்கனைநீ

களத்தினில் கம்பீரப் போர்வாளாய்
கம்யூனிஸ்டின் கனத்த முரசொலியாய்
களையாது பணிசெய்த மணியம்மா
கட்டுக்குள் அடங்குமோ உன்புகழம்மா

காலம் கடந்தாலும் காரிகையே
வாழும் உன் கடிபுகழம்மா
மாற்றம் நூறு நிகழ்ந்தாலும்
மாறாது உம் மகிமையம்மா.

**கவிஞர் தமிழ்க்கீரன், ஈழநாடு**

# சிற்றகல் ஒளி

பகலவன் பேரொளி உலகை ஆளும்
அகலும் நேரத்தில் இருளே சூழும்
பகலும் தேய்ந்தபின் சிற்றகல் துணையே
நகலாய் நமக்கு ஒளியைக் கொடுக்கும்
ஒளிரும் தன்மையால் நெஞ்சம் நெகிழும்
துளியொளி விளக்கும் இன்னல் அகற்றும்
எளிய குடும்பமும் ஏற்றி மகிழ்ந்திடும்
விளக்கொளியால் பொருட்கள் எளிதாக விளங்கிடும்



கவிஞர் குரு ஜெயந்தி, சிதம்பரம்


# கல்லூரி

ஈர்ப்பும் இல்லை எதிர்பார்ப்பும் இல்லை
கனவுகள் ஆயிரம் இருந்தும்
வழி நடத்த யாரும் இல்லை
கடமைக்கு கல்லூரி
கற்றுவாங்க வகுப்பறை
சோர்வில் தேற்றிவிட தோழி
துன்பத்தை காற்றில் விட தோழன்
ஆண்டுகள் ஓடினாலும்
அடுத்த நொடி பற்றி கவலை இல்லை
வேலைக்கு சென்றாலும்
வியர்வை இன்றி உழைத்தாலும்
கல்லூரி மரத்தடி
நிழல் தரும் சுகம்
வேறெங்கும் கிடைக்காது



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# பெருமித எண்ணங்கள்



அடிமை வாழ்வில்,
உடைத்தெறியும் எண்ணம்
அமைதிப் போராட்டத்தில்
வெற்றி காணும் எண்ணம்

கொள்ளையர் கொண்டாலும்
சேர்த்துவிடும் எண்ணம்
கொடுமைகள் செய்தாலும்
பொறுத்திடும் எண்ணம்

இறக்கும் சூழலில்
வாழ வைக்கும் எண்ணம்
இறங்கும் சூழலில்
ஏற்றிவிடும் எண்ணம்

தோற்கும் படியில்
வெற்றிபெறும் எண்ணம்
தோள் தாங்கும்
தோழனாய் வாழ்ந்திடும்
எண்ணம்

உழைக்கும் நிலையில்
சேமிக்கும் எண்ணம்
ஒருதாய்ப் பிள்ளைகளாய்
வாழ்ந்திடும் எண்ணம்

சகோதரர் யாவரும்
சமமென்ற எண்ணம்
சண்டைகள் இல்லா
சமத்துவ எண்ணம்

அன்பே இந்தியர்
அகிலத்தோர் எண்ணம்
அறவழியில் மறம்
ஆன்றோர் நெறி எண்ணம்

இந்தியர் என்பதே
பெருமித எண்ணம்
யாவரும் வாழ்வோம்
என்பதுநம் எண்ணம்

கவிஞர் திருமதி. இரா. இராஜாமணி, ஈரோடு

நிம்மதிக்கான நிழல் தருகையில்
வேம்பு கசப்பானாலும்
வெறுப்பதில்லை வனம்.

உலகெழுக ஓலை தருகையில்
நிழலற்ற பனையின் பயனை
புறம் தள்ளுவதில்லை வனம்.

கனிகளைப் பூசித்து
இடத்தை அழுக்காக்கினாலும்
பறவையின் வாழ்வை
விரட்டுவதில்லை வனம்.

கற்களைக் காட்டி சிரித்தாலும்
நீரற்ற பொழுதிலும்
நதியை மறப்பதில்லை வனம்.

பொல்லார் சூழும்
நில்லாமை உலகில்
நல்லோர் வாழ்வும்
வனம் போன்றதே.




கவிஞர் இளையவன் சிவா

# கோவணத்தைப் பாடுகிறேன்

உண்பது நாழி உடுப்பவை இரண்டென
உரைத்தார் நக்கீரர் புறநானூற்றுப் பாடலிலே;
மானம் காத்திட கோவணம் மட்டுமே
மானுடரில் ஆணுக்குப்போது மெனக்காட்டினார் இரமணருமே!



மானம் காத்திடும் கோவணமோர் எளியபொருளென
மண்ணில் மனிதர் நீவிரும் எண்ணுகின்றீர்;
மானம் காத்திடும் அந்த கோவணந்தான்
மண்ணிற்கு மகேசனை வரவித்ததை அறிவீரோ?

பழையாறை என்றொரு ஊருண்டு சோழவளநாட்டில்;
பரமேசுவரன் மீதுதீராக் காதல் கொண்ட
பத்தர் ஒருவர் அங்கே வாழ்ந்திருந்தார்;
பேர்பெற்ற வணிகரவர் சிவபணியும் புரிந்து வந்தார்!

பழையாறைக் கருகமைந்த நல்லூரில் மடமமைத்து
பரமேஸ்வரன் அடியார்க்கு அமுதமொடு குறிப்பறிந்து
கீளுடை கந்தை கோவணம் உடைகளென
காதலினால் பலநாளும் இடைவிடாது செய்துவந்தார்!

தன்னடியான் தன்மீது கொண்ட தீராக்காதலை
தரணி வாழ்வோருக்கு அறிவித்திட விரும்பி
கோவணதாரியாய் நல்லூரானடி யார்திருமடமடைந் தவரைப் போற்றி
கோவணமொன்றைப் பாதுகாத்திட தந்துபொன்னி ஆடச்சென்றார்!

பொன்னியாடி வரும்போதே பெய்திடவைத்தார் கார்முகிலை;
பெற்ற கோவணத்தைத் தந்திடப்பணித்தார் மாற்றியணிந்திட;
கொடுத்தவரே கொடுத்ததை எடுத்துக்கொண்டதை அறியாது
கள்வனெனவரால் அழைக்கப்பட்டதை மாற்றிடவிறுதியில் துலையேறினார்!

என்பொருளென்ற பற்றுவிடுத்து மனையாள் பிள்ளையோடு
எம்பெருமான் ஐந்தெழுத்து மந்திரத்தைச் சரணாகதியால்
ஓதியேறிட கோவணம்தந்தவ ரினொற்றைக் கோவணத்திற்கே
ஒப்புரவாளன் உத்தமன்நின்ற தட்டும் நேர்நின்றதே!
அமர்நீதியென்ற நாயனாருக்கும வர்மனையாளோ டுமகனுக்கும்
அமரவாழ்வளித்த நல்லூரானின் கோவணம் வாழ்கவாழ்கவே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# உன்னையே தேடும் மனம்


தேடிக் களைத்துத்
தேடலில் திளைத்து
உன்னையே தேடி
மனம் அலைபாய்ந்து

உனக்காகக் காத்திருந்த
காலங்கள் யாவும்
ஞாபகத்தின் நிழலாய்
என்மேல் விழுந்து

நமது வாழ்வின்
கனவைப் பேசுகின்றன!
காற்றாக என்னைத்தீண்டி
கவிதையாகக் கொஞ்சி

இதழ்களின் மொழியை
இசையாய்ப் படித்த
எத்தனையோ நினைவுகள்
வந்து போகின்றன

துளிர்க்கும் மழையில்
காதலைச் சொன்ன
அந்திவேளை இருக்கிறது
அருகில் நீயில்லை!



கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# மண்டியிட்டு

மறப்பதற்கும்
விடுப்பதற்கும்
தடுப்பதற்கும்
பேரளவில் வழிகள் இருந்தும்
மறுக்கி மறுக்கி
மீண்டும் மீண்டும்
மண்டியிட்டு
மாய்ந்து கிடக்கிறது
மனது
அன்பை நோக்கி!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# இதழ் மறந்த புன்னகை



இதழ் மறந்த
அழகிய புன்னகை
காலம் சிறைவைத்த
பக்கங்களின் மறுவடிவம்

எத்தனை அவதிகளைத்தான்
கடந்தும் நடந்தும்
பார்வையற்று நிலைமாறிப்
பயணித்துப் போவது

இதயக் கீறல்களுக்குள்
ஒழிந்து கொல்லும்
ரணங்களின் வலிகளால்
வாயடைக்கும் மௌனம்

உந்தி அறைகிறது
உயிரின் உணர்வுகளை
விழிகளின் அசைவினைக்
கட்டிப்போடும் அசமந்தம்

வாழ்நாள் சுகங்களுக்கு
கொஞ்சம் கொஞ்சமாய்
வேட்டுவைத்து ஊமைச் சிறகுளை
உடைத்து விடுகிறது

வார்த்தைகள் வதைகளாய்
முட்களில் சிக்கிய
புடவையாய்ப் புண்ணாகும்
வேதனை யாரறிவார்

தொடரும் அகிம்சைப்
பயணத்தில் இடர்களைத்
தாண்டிட மீண்டுமோர்
அவதாரமே வழியாகியது.

கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# இமைக்கும் இடையில் உருவான உறவு



வானம் போல விரிந்த மனம்,
வெண்ணிலவனின் வார்த்தைகளில்,
வழிச்செல்கின்றார் கேவர்மன்,
வாழ்வின் ஒரு வண்ணமாகவே.

இரத்தம் இல்லை, ஆனாலும்
இருதயமெல்லாம் இணைந்ததோ,
இருள் நேரம் ஒளியாய் வந்தான்,
ஒற்றையனாய் நிலைத்ததோ!

சிறு பயணத்தில் சேர்ந்து நடந்தோம்,
சிரிப்புகள் சிந்தினோம்,
தொட்ட அடிச்சுவடு வரை,
தொட்டுணர்ந்த பாசமோ!

விழிக்கடியில் கனாக்கள் வந்து,
விரிவான இரு பாதைகள்,
ஒருவன் வெயிலில் வழியாட,
மற்றவன் நிழலாய் பயணமே.

மௌனம் பேசும் இடைவெளியில்,
மனசு மட்டும் ஒற்றுமை,
மாறி மாறி ஏறிவந்தோம்,
மரங்களைப் போல ஒட்டுமொத்தம்.

தாய் திருவடி போலவே,
தந்தை ஆசை போலவே,
நட்பின் எல்லையை நமக்குள்
கடந்து வாழ்ந்த உறவதே.


அண்ணனெனும் அரணாகவும்,
தம்பியெனும் துணையாகவும்,
வெண்ணிலவனும் கேவர்மனும் சேர்ந்தால்,
வாழ்வே ஒரு கவிதையே

கவிஞர் இ. கேவர்மன், இலங்கை

புதுயுகம் கண்டிட  புதுமைகள் படைத்திட
அன்புலகம் காணவே.
அரிதாய் தோன்றிய *மகான்கள்*
பூமியிலே வலம் வந்து புரட்சியும் கண்டனரே.



புத்தன் இயேசு காந்தி என
ஆசையொழித்த மனமும்
அன்பு கொண்ட நெஞ்சமும்
அகிம்சையால் உலகையே வெல்லும்
உண்மை வாழ்வை
உரக்கச் சொன்ன சித்தர்கள்.



அறிஞர்கள் மேதைகள் வாழ்ந்த புண்ணிய பூமி
கல்வியின் வளர்ச்சியால் உயர்வுகள் பெற்றிட
உலகையே வலம் வர பாதை போட்டு
தந்திட்ட கர்மவீரர் பூமியிது.

அன்பு நட்பு பாசமே உலகை இயக்கும் சக்தியாய்
போற்றி வாழும் குணம் கொண்ட புனிதர்களின் நாடு
புவியே கொண்டாடும் புதுமைகள் படைத்திடும்
சத்தியத்தின் வழி நின்று உலகிற்கு வழிகாட்டும்
அமைதி தோட்டமாம்  அன்பு கொண்ட நம் நாடு.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# ஆகச் சிறந்த மனிதன்

முளைக்கும் விதையும்
முளைக்காது போனால்
மண்ணைப் பழிப்பான்
மழையைத் தூற்றுவான்
தன்னால் புதையுண்ட
நெகிழி தான்
காரணமென ஒப்புக்கொள்ளாத
ஆகச் சிறந்த மனிதன்



நிலத்தில் கிடக்கும் முள்
அதை அலட்சியமாய் கருதி
மிதித்து விட்டு
முள் குத்தியதென
முள்ளைக் குற்றம் சொல்லும்
ஆகச் சிறந்த மனிதன்

பங்கிட்டு சாப்பிடும் காகம்
பங்கிட்டு உண்பதை பாடமாக்கும்
பங்கிட மனமில்லா மனிதன்
பாட்டி வடையை திருடியதாய்
காகத்திற்கு திருட்டு
பட்டம் கட்டும்
ஆகச் சிறந்த மனிதன்

விலங்குகள் காட்டை ஆக்கிரமித்து
வீட்டைக் கட்டிவிட்டு
விலங்குகள் நடமாடுவதாய்
விலங்குகளிடமிருந்து காத்திட
கூப்பாடு போடும்
ஆகச் சிறந்த மனிதன்

நிலத்தடிநீரை உறிஞ்சி
எடுத்து பயன்படுத்திவிட்டு
நில நடுக்கம் வந்தால்
நிலம் என் உயிரை
வாங்க வருதே என்று
அலறித் துடிக்கும்
ஆகச் சிறந்த மனிதன்

மரங்களை நடுவதற்கு பதிலாய்
மரங்களை வெட்டிவிட்டு
காற்றில்லை என்று
கதறிக் கூப்பாடு போடும்
ஆகச் சிறந்த மனிதன்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# கண்ணால் கதை பேசு

கண்ணாலே பலவித கதையும் பேசிய
விண்ணக மாந்தரில் விந்தையும் புரிந்தாயே
சொல்லில் அட்ங்காத சொந்தமும் நீயே
வில்லான அம்பின் விசித்திர கண்ணே

நித்தம் நின்பார்வை நினைவையே வென்று
சுத்தும் கதியானேன் சுந்தரி உன்னாலே
கூடும் சொல்லுமே கோடியே இருந்தாலும்
வாடும் மனதையே வாஞ்சையோடு பார்ப்பாயே

கரும்புக்கொல்லை களையெடுக்க கருத்தாக வந்தே
விரும்பியதை பேசியே விடுதலையாக இருந்திடலாம்
சொக்கி விழும் சொப்பன நேரத்திலே
கொக்கி கண்ணாலே கொளுத்துவேனே உன்னை

சுட்டும் விழியாலே சுத்தவும் வைத்தாயே
விட்டுமே போகாத விட்டில் பூச்சியானேன்
பட்டுக் கிளியே பறக்கும் சிட்டே
கூட்டுக் கிளியாக கூடியே வாழ்வோமே

தேங்கிய என்னையே தேற்றியே வளர்த்தே
தூங்காமல் நின்ற தூரிகை பெண்ணே
கண்ணிய வாழ்வில் கணக்கான கண்ணே
எண்ணிய எனது எதிர்காலமும் நீயே

கவலையே காணாத கன்னியே உனையே
கைவளையல் மாட்டியே கருத்தாக கைபிடிப்பேனே
குடும்பம் சிறக்க குலமும் கண்டே
விடுப்பேனே அத்தனையும் விரும்பாத செயலையே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்



அந்த
குப்பையைப்
பார்த்து ஓட்டைப்
பல்லுடன் சிரிக்கிறது
குப்பைவாரி.

அரை
குறையாக
உண்டுவிட்டு எழுந்தால்
அது 5 நட்சத்திர விடுதி

எப்படியோ
ப(வ)டித்து விடுகிறேன்
காணும் காட்சிகளில் ஓர்
கவிதையை.

அந்த
மொட்டை மாடியில்
விற்பனைக்கு விடப்பட்டுள்ளன
உள்ளாடைகளுடன் சேர்த்து
ஒட்டு மொத்த ஆடையும்.

ஆட்களே
இல்லாப் பேருந்தில்
அவள் ஓர் ஆணுக்கு
அருகில் உட்காருகிறாள்
பாதுக்காப்பு.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# அலட்சியம்

எங்கு போய்விடப் போகிறது  என்று
எதையும் அளவுக்கு அதிகமாக
அலட்சியம் செய்யாதீர்கள்
அதன் முக்கியத்துவம்
புரியும் போது
முழுவதுமாக
கைவிட்டு
போயிருக்கும்



கவிஞர் தீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# அவன் இல்லையே அவனி ஏது?

அனைத்துமானவன்
அனைவருக்குமானவன்
அனிச்சை உறவு அவன்
அனுகலிலே ஆசான் அவன்

அறம் சொல்பவன்
அறைந்தே சொல்பவன்
அளவதிகமான பாசக்காரன்
அள்ளிக்கொடுக்கும் நேசக்காரன்

அழுத்தமான ஊமை அவன்
அழைக்காத பேரமைதி அவன்
அழுக்கான சுத்தக்காரன்
அழிக்கமுடியா கல்வெட்டு அவன்

அலைபோல விடாமுயற்சி அவன்
அலைந்தே திரிந்து உயர்த்தவான் அவன்
அருகில் இல்லாதவன் அவன்
அருகாமையிலும் காப்பான் அவன்

அயலாரை சந்தேகிப்பவன் அவன்
அமைதியாக சிந்திப்பவன் அவன்
அபயம் தரும் கடவுள் அவன்
அபாயம் போக்கும் காவலன் அவன்

அத்தனை பேருக்கும் வேண்டும் அவன்
அத்தனையிலும் வேண்டும் அவன்
அற்புத உறவாய் வேண்டும் அவன்
அண்ணன் தம்பியாய் வேண்டும் அவன்

அஞ்சாமை போக்க வேண்டும் அவன்
அஞ்சுதலை நாகமாக அவன்
அச்சத்திற்கு துணையாக அவன்
அகமுடையான் ஆக அவன்
அப்பாவாக இருக்கும் அவன்



அணு தந்து உயிர் தரும்

அவனில்லையே
அவளும் ஏது?அவனியும் ஏது?

அழகான அசாத்திய தைரியத்தோடு ஆண்
அரிமா வேண்டுமே ஒவ்வொரு
அகத்திலும் வேண்டுமே சகோதர பாசத்தோடு

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# வரவும் செலவும்

எந்த காலமும்
தொடர்வதில்லை நித்தமும்

வெயிலும் பனியும்
வெளுக்கும் மழையும்
தங்கிட நினைப்பதில்லை

வாழ்க்கையே ஒரு வரவிலும்
ஒருசெலவிலும்தான்
நடைபோடும் நாடகங்கள்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# என் ஆசைக் காதலே

உள்ளத்தால் இணைந்து
உயிரோடு உயிரானோம்
வெல்லமாய் இனித்தகாதல்
வேதனை கொடுக்கிறதே

பள்ளத்தில் விழுந்தவளாய்
பரிதவித்து நிற்கின்றேன்
துள்ளிய மனதும்
துடித்துக் கிடக்கிறதே

அள்ளி அணைத்தவனே
அவமதித்து போகாதே
முள்ளாய் நெஞ்சில்
முட்டிக் கிழிக்கிறதே

வெள்ளி முளைக்கா
வானமாய் தானே
புள்ளி வைக்காத
கோலமாய் நானே



தள்ளாமை வலியோடு
தவிக்கின்ற மானாய்
வெள்ளத்தில் அடித்த
வேரறுந்த மரமாய்

பேசாது கொன்று
பிரிந்து செல்லாதே
பிரியமானவளின்
பிரியம் புரியாதா உயிரே

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி, இலங்கை

# வீறு கொண்டு எழு மனமே

தன்னிலை கண்டு
வருந்தாதே மனமே
தாயையும் மாந்தர்களையும்
மதித்திடு மனமே

திருவிழாவாய் மகிழ்ச்சியாய்
மகிழ்ந்திடு மனமே
தீய செயல்களை செய்யாதிரு மனமே

துன்பம் வரும் வேளையிலும்
துவளாதிரு மனமே
தூய அகமதில் லயித்திரு மனமே



தென்றலாய் பிறருக்கு
சாமரமதை வீசிடு மனமே
தேக பலமதை இணைத்து
அகமதில் பலத்தையும்
இணைத்திடு மனமே

தையத்தக்கா என என்றும்
மகிழ்வுடனே வாழ்ந்திடு மனமே
தொண்டுதனை பிறருக்கு
செய்திட தயங்காதே மனமே

தோல்வி கண்டு கலங்காதிரு மனமே
விழிகளில் துயரை காட்டிடாதே மனமே
தௌ தௌ என்றே மழலையாய்
மனம் மகிழ்ந்திடு மனமே

அநீதிகளைக் கண்டு
பொறுத்திட வேண்டாம் என்றும்
என்றென்றும் வீறு கொண்டு எழு மனமே!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# உனக்கு நீயே எஜமான்


வாழ்வின் வீழ்ச்சிகளில்
முயன்று தோற்றல்களில்.
மனமுடைந்து விடாதே
மற்றவரோடு
உன்னை ஒப்பிடாதே

சூரியனுக்கும்
சந்திரனுக்கும் இடையில்
நெருங்க முடியாத
வேறுபாடு உண்டு.
ஆனால் இரண்டுக்கும்
மதிப்புண்டு

ஒப்பீடு செய்
வசதியான வாழ்வையல்ல
ஆனால் கல்வியில்
மற்றவர்களோடு ஒப்பிட்டு
உன்னைச் செப்பனிடு

ஒழுக்கத்தில்
மற்றவரோடு போட்டி போடு
அறிவையும்
ஆற்றலையும் ஒப்பீடு செய்.

நம்பிக்கை வேரூன்றினால்
நடப்பவை யாவும்
நன்றாய் நடக்கும்.



எல்லோரிடமும்
ஏதோ ஒரு தனித்துவம் உண்டு.
ஆற்றல்கள் பலவுண்டு .

அறிந்து தெரிந்து
செயலாற்றுவதில் என்னவோ
காலம் கடந்து விடுகிறது.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷா, கம்பளை (இலங்கை)

# மரங்கள் வியாபிக்கின்றன

மௌனம் வழியும்
காடுகளின்
தோற்றங்களில்
வேர்களுக்கான
நீரோடையின்
சத்தங்கள்
இன்றும்
கற்றுக்கொடுக்கின்றன
நகர்வுகளின் முயற்சிகளையும்
துளிர்விடும் அதிசயங்களையும்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்!
பெரிதினும் பெரிது
பெண்கல்வி என்றுணர்ந்து
அருகினில் அமர்ந்து
அன்பொழுகும் வார்த்தையொடு
பெயர்த்திக்கு பாடத்தைக்
கற்பிக்கும் பாட்டி!
பெண்ணே!
வாழ்க்கையும் புத்தகம்தான்!
வாசித்தால் புரியுமென
உணர்த்திடும் பாட்டி!
பெயர்த்தியை
பாரதிகண்ட
புதுமைப் பெண்ணாக்க வழிகாட்டி!
பற்பல கதைகளைக்
கேட்டு மகிழட்டும்!
நற்பண்புகளை, நல்லொழுக்கத்தை
நாளும் வளர்த்து
அறிவால் ,வீரத்தால்
தலைசிறந்த பெண்ணென்று
பெற்றோர்க்கு பெருமைகளை
பெருமகிழ்வை அளிக்கட்டும்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# அவள் நீ



துயரம் இல்லாமல் துக்கம்
தூரம் இல்லாமல் சிறு தூக்கம்
யாரால் இந்த துவக்கம்
ஏன் இந்த தினம் மயக்கம்
யாரால் இங்கு வந்த வினை
பசியால் தினம் தந்த வினை
நீ யார் நான் யார் என்ற பிணை
விழாமல் வாழ்ந்து காட்டும் வினை
உன் உறவு என்ன என் உறவு என்ன
உடன்படாமல் தினம் தினம் போராட்டம்
அதில் நீயும் நானும் படகு போல் ஓர் ஓட்டம்
அலைகள் தான் தினம் மோதி செல்கிறது
மோட்சமில்லாமல் ஒவ்வொரு கணமும்
பெண்ணே உன் மன அலைகள்
என் காலடிபட்ட சுவடு களைத்து சென்றது
மீண்டும் மீண்டும் உருவாக்கினேன்
உன் பாதடி படும் வரை பாரம் இருந்தும்
உன்னை பார்க்க முடியாமல்
தினம் தினம் கனவுகளில் அல்ல
நினைவுகளில்
அவள் நீ நான் நீ.

கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# பள்ளிக் காதல்

பனிப் பெய்தால்
வருவது கூதல்
பள்ளிப் பருவத்தில்
வருவது காதல்

பத்தாம் வகுப்பில்
புத்தக முகப்பில்
வரைந்தேன் அவளை
அழகிய ஓவியமாய்

பார்த்தாள் பரவசமாய்
பரிசளித்தேன் இலவசமாய்
நிசமாய் என்
வசமாய் ஆனாள்

என்று நினைத்தே
நானும் அவளுக்காய்
எழுதினேன் கடிதம்
கவிதை வடிவில்

வாசித்தாள் -அவள் உண்மையில்
உயிராய் நேசித்தாள்
யோசித்தேன் -அவள் நினைவுகளை
அடிக்கடி யாசித்தேன்

அழகியவள் என்னோடு அன்பாய் பழகியவள்

என் இதயத்தின்
உதயமாய்
என் சுவாசக்
காற்றாய் ஆனாள்

ஆனால் மறுநாள் காணாமல் போனாள்
கடைசியில் கானல்
நீராய் ஆனாள்



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கலேவெல



அதனாலேயே

தன்நிலை விளக்கம்
கொடுத்து கொண்டிருப்பதால்
நல்ல முடிவுகள்
நம் செயல்களால் வருவதால்
நமக்காக பிறர் பரிந்து
பேசுவதால்

எதிர் வருபவற்றை
துல்லியமாய் கணித்து
சரியாய் திட்டமிடுவதால்
விமர்சிப்பவரிடத்தில்
மாற்றம் ஏற்படபோவதில்லை

அனுமானங்களற்று
விருப்பு வெறுப்பற்று
மனசாட்சியின்படி
நடந்துகொள்ளும் வரை.

*******************************

அது எல்லாம்

பார்த்தில் படித்ததில்
பகிர்ந்ததில் கேட்டதில்
அறிந்ததில்

மற்றவரின்
என்ன வேண்டும்
என்ற தெளிவு
அந்த தெளிவால்
துல்லிய திட்டமிடலால்
திட்டமிடலால் வந்த
சரியான செயலாக்கம்
செயலாக்கத்தால்
கிடைத்த நல்ல முடிவு

இவை எல்லாம்
நமக்கு நன்முனைப்பு
ஊக்கச்சக்தி மட்டுமே
இத்தனையும் நிகழதேவை
நம் உள்ளத்தால் உறுதி

அது நடந்தால்
புத்தி செய்ய வேண்டியதை
மனம் பார்த்துக்கொள்ளும்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

ஆண்களுக்கு இது :
மூச்சி இரைக்கும்
குரல் சிணுங்கும்
ஆத்திரம் தொண்டை அடைக்கும்
அழுகை முட்டும் கண்ணீர் வர கெஞ்சும்
ஆண் என்ற நினைப்பு வரும்
அத்தனையும் அடங்கும்

***

சிரிக்க சொல்லி
எடுத்த புகைப்படங்களில்
சிரிப்பு இல்லை ஏனோ ?

***

எழுதினேன்
மயில்பீலியில்
எழுத்துக்கள் பறந்தன

***

வருடக்கணக்கில் பறந்த வானம்
தன் குஞ்சு பறக்கையில்
புதிய வானமாய் விரிந்தது
பறவைக்கு

***

சேவல் சண்டைகளில்
கூவல்கள் இல்லை
எல்லாம் செயல்தான்

***

முண்டமே உனக்காய் செய்வது தேவை!
சேவை என்பது
தனி அத்தியாயம்

***

நல்ல நீரில்
நுரை இருக்காது
நல்ல மனதில்
குறை இருக்காது

***



ஒரு கையளவு நீரில்
தூர்வாரி துப்பிவிட்டார் தாத்தா
தன் வாயை

***

இங்கிருந்த
வெறுமையை காணவில்லை
அதன் மீது நின்று கொண்டே தேடுகிறான்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

ஜே.கே.யின் நாட் குறிப்பிலிருந்து....
ஜூலை 10, 1972. பய்குல்லாவின் மார்கெட் பகுதியில் ஊரிலுள்ள நண்பரைத் தேடி வந்தேன். ஊரிலிருந்து அத்தையிடமும் தங்கையிடமும் சொல்லாமல் கொள்ளாமல் நூறு ரூபாய் பணத்தையும் அவளுக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு ரயில் டிக்கெட் எடுக்காமல் பாம்பாய்க்கு வந்து மூன்று நாளகி விட்டது.



இன்னும் ஒருமுறைதான் சாப்பிட பணம் இருக்கிறது. தாராவியில் தங்கியிருந்த நண்பரும் கோவாவிற்கு மாற்றலாகிப் போய் விட்டதால் இந்தப் பம்பாய் ஊரில் யாரையும் தெரியாமல் திண்டாடிக்கொண்டிருந்த நேரத்தில்தான் சங்கர் பய்குல்லாவில் காய்கறி மார்கெட்டில் வேலை செய்வதைக் கேள்விப்பட்டு வந்தேன்.

மூன்று நாளும் தூங்கி எழவும் குளிக்க, வெளியே போகப் பட்டபாடு திரும்பவும் ஊருக்குப் போய் அத்தையுடன் சேர்ந்து வயற்காட்டுக்கு தினக் கூலி வேலைக்குப் போய் விடலாமோ என்று தோன்றியது.

எப்போது வரும் என்று சொல்ல முடியாமல் கருமேகங்கள் மின்னல் மூலம் கண்ணை சிமிட்டிக் கொண்டு 'கொட்டிவிடப் போகிறேன் மழைத்தண்ணீரை...' என மிரட்டிக் கொண்டிருக்கிறது.

ரோடெல்லாம் எங்கு பார்த்தாலும் மழைநீர் தேங்கி, போய் வருகின்ற கார்களின் வேகத்தில் தண்ணீர் தெறித்துக் கொண்டிருக்கிறது.

போட்டிருக்கும் இந்த ஒரே உடையும் பலமுறை நனைந்து உடலை நடுக்கிக் காய்ந்து விட்டது.

கவிஞர் இரஜகை நிலவன்

மிருகக்காட்சி சாலை, பூங்காவைத் தாண்டி பய்குல்லா மார்கெட் வந்து சேர்ந்த போது ஒரு கடையில் கூட்டம் கூடி நின்றது.

மழைவேறு ஆரம்பித்து விட, நனைந்து கொண்டே "சார், இங்கே சங்கர் எந்த கடையில் வேலை பார்க்கிறார் தெரியுமா" என்று அருகிலிருந்த வெற்றிலை பாக்குக் கடையில் கேட்டேன்.

என்னை ஒரு மாதிரி வேற்றுக் கிரகத்திலிருந்து வந்த மனிதனைப் போல மேலும் கீழும் பார்த்து விட்டு "கியா" என்றான் அந்த பையாக்காரன். தமிழ் புரியாத இடம் என்று எண்ணி என் தலையில் தட்டிக் கொண்டு "சங்கர் கிதர்" என்று தெரிந்த ஒரே ஹிந்தி வார்த்தையை உபயோகித்தேன்.

வாயில் ஒதுக்கி வைத்திருந்த வெற்றிலைச் சிவப்பை 'புளிச்' என்று கடையின் முன்னால் நடுரோட்டில் துப்பி விட்டு, "கோன்..சங்கர்... ஏதோ மர் கயா..." என்று அவன் கையைக் காட்டிய பக்கத்தில் அந்தக் கூட்டம் நின்று கொண்டிருந்தது.

அவன் சொன்ன வார்த்தை புரியாமல் அந்தக் கூட்டத்தை நெருங்கிய போது "அய்யோ ...அண்ணா.. என்னை விட்டுப் போய் விட்டீர்களே " என்று தலையில் அடித்துக் கொண்டு தமிழில் அழுது கொண்டிருந்த சப்தம் கேட்க, கூட்டத்தை நெருக்கிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தேன்.

சங்கர் இறந்து போயிருந்தார். அருகில் அவர் தங்கை அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். என் தலைக்குள்ளே ஒரு இடி இறங்கிய மாதிரி இருந்தது. கண்கள் இருண்டுகொண்டு வந்தது.

சுற்றியிருந்தவர்கள் ஹிந்தியிலும், மராத்தியிலும் பேசியதிலிருந்து எனக்குப் புரிந்த ஒரு விஷயம் சங்கருக்குப் பிறகு அவர் தங்கையை யார் காப்பற்றுவார்கள் என்பது மட்டுந்தான். கொஞ்சம் உதவி செய்யலாம் என்று தோன்றியது. என்ன செய்வது...?

நானே அடுத்த வேளை உணவிற்காக அல்லாடிக் கொண்டிருக்கிற, உறைவிட மில்லாத மாற்றுடையில்லாதவன். நான் என்ன உதவி செய்ய முடியும்? கொஞ்ச நேரத்தில் சங்கருக்கு இறுதிச் சடங்கிற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தது. அருகில் அழுது கொண்டிருந்த அந்தப் பெண் மயங்கி விழுந்து விட... அருகிலிருந்த கடையி லிருந்து ஒரு சிறிய பிளாஸ்டிக் மக்கில் தண்ணீர் எடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்து அவளுக்குக் குடிக்கக் கொடுத்தேன்.

சங்கரின் உடலை எடுத்துக் கொண்டு போகும்போது அந்தப் பெண் எழுப்பிய அபலக் குரல் குரல்வளையை நெறித்தது. சங்கரின் உடல் தீயில் எரியும் போது எந்தக் கனவுகளோடு பம்பாய்க்கு வந்தேனோ அத்தனையும் அந்தத் தீயில் கருகியதுபோல உணர்ந்தேன்.

திரும்ப வந்து அவன் தங்கையிடம் "ஏதாவது சாப்பிடுகிறாயா?" என்று கேட்டு விட்டு அவளுடைய பதிலைக் கூட எதிர்பார்க்காமல் இரண்டு கப் டீயும் இரண்டு ரொட்டி பொறையும் வாங்கி வந்து அவளுக்கு ஒன்று கொடுத்து விட்டு நானும் சாப்பிட ஆரம்பித்தேன்.
"எங்களுக்கு வீடெல்லாம் கிடையாது. இந்தக் கடையைக் கவனித்துக் கொண்டு அதற்குப் பின்னாலிலுள்ள மறைவிடத்தில் சமைத்து சாப்பிட்டு படுத்து கொள்வோம்."

"குளிக்கிறதுக்கும், வெளியே போறதுக்கும் அந்தாலே பொது கழிப்பிடம் போயிருவோம். ஆமா.. நீங்க... நீ.. நீங்க யாரு?" என்று வாய் குழறிய வாறு கேட்டாள். சங்கரின் தங்கை

"நான்... நான்.. ஜெயக்குமார். என் நண்பர் சங்கர் பய்குல்லாவில் காய்கறி(பாஜி) மார்கெட்டில் வேலை செய்வதைக் கேள்விப்பட்டு அவர் மூலம் வேலை தேடிக் கொள்ள பம்பாய்க்கு வந்தேன். ஆமாம்.. உன் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"ராணி" என்றாள் பயம் தீராமல்.


தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# நீர் வளர் ஆம்பல்

## நூல் அனுபவம்

சுகிர்தராணி ; காலச்சுவடு பதிப்பகம்
முதல் பதிப்பு ஜனவரி 2022
பக்கம் 96 ; விலை ரூபாய் 100




சங்க இலக்கியம் துவங்கி இன்றைய காலம் வரை கவிதை என்பது காலத்தின் நிகழ்வுகளைப் பதித்து வைக்கும் பெட்டகமாகவோ சமூகத்தின் நகர்வை எழுதி வைக்கும் கண்க்காளராகவோ அகவெளியைப் பதிவுசெய்யும் அழகியலாகவோ நிகழ்காலக் கொடுமைகளைத் தட்டிக்கேட்கும் புரட்சிக்குரலாகவோ எழுந்து நிற்கிறது.

கலிதையெனும் வாள் கொண்டு கண்முன் விரியும் காலக்கொடுமைகளை வீழ்த்திவிட முடியுமென்ற பெருநம்பிக்கையில் கிளம்பும் எண்ணத்தின் ஊர்வலம் தான் காணும் சக மனிதரிடத்தும் அப்பெருநெருப்பை பற்றவைக்க முயற்சிக்கும்.

அரசியலமைப்பு எழுதப்பட்டு சட்டங்களின் வழியே சமூகத்தை ஒழுங்குபடுத்தி எத்தனையோ சீர்திருத்தவாதிகள் ஓயாது ஒளியாது முழங்கியபின்னும் இன்னும் மனிதனைக் கூறுபோட்டு இனமென்றும் சாதியென்றும் ஏற்றத்தாழ்வில் நிலைநிறுத்தும் மானிடப் பக்தர்களை சுட்டெரிக்கும் அக்னிச் சொற்களில் எழுதப்படுகிறது நீர் வளர் ஆம்பல்.

பெண்ணடிமைத்தனம் ஆணாதிக்க மேலாண்மை மொழியைக் களவாடும் அரசியல் அநாகரீகம் தீண்டாமையின் பெருஞ்சூட்டில் பொசுங்கிப் போகும் ஏழ்மைத்தனம் சக மனிதர்களுக்குக் கொடுக்க முடியாத மனிதம் என சமூகத்தின் சீர்குலைவுகளுக்கான நச்சுக்களை கேள்வி கேட்கும் எழுத்ததிகாரத்தில் நீர் உயர உயர தன்னையும் உயர்த்திக் கொள்ளும் மேன்மை மனப்பாங்கில் நின்று விரிகிறது ஆம்பல்.

கவிஞர் இளையவன் சிவா

## நூல் அனுபவம்

சம கால அரசியலின் தாக்கத்தை அதிகார வர்க்கத்தின் ஓரவஞ்சனையை ஒரு கண்ணில் வெண்ணெயும் மறு கண்ணில் சுண்ணாம்பும் தடவிப்பார்க்கும் சமமற்ற மனப்போக்கை எழுதிக் காட்டுகிறது காட்சியென படமும் விரியக் கூட்டுகிறது இந்தக்கவிதை.

**தயவு செய்து தற்கொலை செய்து கொள்
நாங்கள்
சமையலராக இருக்கிறோம்
நாங்கள் சமைத்த உணவு உனக்கு வேண்டாமெனில்
நாங்கள்
மருத்துவராக இருக்கிறோம் உனக்கு நீயே வைத்தியம் செய்து கொள்
செவிலியராக
இருக்கிறோம்
உன் பிரசவத்தை
நீயே பார்த்துக்கொள்
பிணத்தை எரிப்பவராக இருக்கிறோம்
உன் பிணத்தை
நீயே எரித்துக்கொள்
பொறியாளராக இருக்கிறோம் உன் கட்டடத்தை
நீயே கட்டிக்கொள்
வழக்கறிஞராக இருக்கிறோம் உனக்கு நீயே வாதாடிக்கொள்
முடி வெட்டுபவராக இருக்கிறோம்
உன் மயிரை
நீயே சிரைத்துக் கொள்
ஆசிரியராக இருக்கிறோம்
உன் பிள்ளைகளுக்கு
நீயே சொல்லிக் கொடு
ஓட்டுநராக இருக்கிறோம்
உன் போக்குவரத்தை
நீயே பார்த்துக்கொள்

கவிஞர் இளையவன் சிவா

## நூல் அனுபவம்

கூலிகளாய் இருக்கிறோம்
உன் சுமைகளை
நீயே தூக்கிக் கொள்

மலம் அள்ளுபவராக இருக்கிறோம்
உன் மலத்தை
நீயே அள்ளிக் கொள்

சாக்கடை வாருபவராக இருக்கிறோம்
உன் சாக்கடையை
நீயே வாரிக்கொள

கலப்பு மணம் புரிந்தவராக இருக்கிறோம்
உன்னையே நீ புணர்ந்து கொள்

நாங்கள்
அரசியலமைப்புச் சட்டத்தை எழுதியவராக இருக்கிறோம்

இதுவும் உனக்கு
வேண்டாமெனில்

தயவு செய்து
தற்கொலை செய்து கொள்.

தெய்வத்தின் மீதான நம்பிக்கை என்பது மனித குலம் தனது வாழ்வை இடர்களற்றும் இடுக்கண் தொலைத்தும் நிம்மதியான நகர்வை நோக்கிய பயணத்திற்கான வெளிச்சம் எனப் பார்க்கிறது. அதுதான் கல்லோ சிலையோ கண்மூடித்தனமான நம்பிக்கையில் கடவுளாகக் காட்சியளிக்கிறது. ஆனால் அதுவே தாங்கமுடியாத வலிகளைக் கண்டும் தூங்கிக் கொண்டிருந்தால் அறச்சீற்றத்தில் ஏதும் செய்யாது வேடிக்கை பார்த்தபடியிருந்தால் கடவுளுக்கெதிராகவும் கோப்பு சுழற்றி கவலையை வெளிப்படுத்தும் துணிவைத் தந்துவிடுகிறது தமிழின் தொன்மை.

கவிஞர் இளையவன் சிவா

## நூல் அனுபவம்

**யாரோ ஒரு பெண் கடவுள்..

அந்த இரண்டுகால் மிருகம்
ஆறு வயது குழந்தையை
முட்டுச் சந்தில்
வன்புணர்ந்து கொண்டிருந்தபோது கருவறையில் இருக்கும்
உங்கள் கடவுள்
எங்கு போனார்
ஒரு வேளை
அவரும்
ஏதோ ஒரு கோவிலில்
யாரோ ஒரு பெண் கடவுளை வன்புணர்ந்து கொண்டிருக்கலாம்.

தொழில்நுட்பங்கள் அறிவியல் கண்டுபிடிப்புகள் என காலத்தின் நகர்வுகள் அனைத்தும் மனித குலம் மேம்பாடு அடையவும் உழைப்பைச் சுருக்கி எல்லோரும் சமம் என்றாக்கி வேலையின் அழுத்தத்தை சரிப்படுத்தவும் நமக்கு கிடைத்த வரங்கள். ஆனாலும் வான்வெளியை அளந்திடப் பார்க்கும் அறிவியல் விளைந்த போதும் வேற்று கிரகங்களில் மனிதர்களைத் தேடி விண்வெளி ஓடங்கள் ஓயாது ஓடிக் கொண்டிருக்கும் போதும் இன்னும் எங்கோ ஒருவன் மலத்தை அள்ளும் கொடுமை நிகழ்ந்து கொண்டு தானே இருக்கிறது. மனித குலத்தை மேம்படுத்தும் கருவிகளில் கவனம் வையுங்கள். மனிதர் வாழ்வை செம்மைப்படுத்தும் அறிவியலை மேம்படுத்தும் திசை நோக்கி நகருங்கள் என்று வேண்டுகோள் விடுகிறது இந்தக் கவிதை.

**கைக்கெட்டும் தொலைவு..


கைதட்டி ஆரவாரித்து கட்டித்தழுவி
கற்பனைக்கு எட்டாத தொலைவுக்கு
ஏவுகணையை
அனுப்பும் போதெல்லாம் வாயைக் கட்டி
ஆடை களைந்து
பத்தடி ஆழத்தில்

கவிஞர் இளையவன் சிவா

நூல் அனுபவம்

மலத்தை அள்ளிக்கொண்டிருக்கிறார் எங்கோ
யாரோ ஒருவர்.

சமகால நிகழ்வுகளுக்குள் தன்னைத் தொலைத்திடாமல் சமூகத்தின் போக்கில் சாக்கடைத் தனங்கள் பெருகும் போது ஏனென்று வினாத் தொடுத்தாவது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் வீரத்தின் விளைநிலமாக்கி கவிதைகளுக்குள் காலமெழுதும் வரலாற்றை கல்வெட்டென பதித்து விடுகிறார் கவிஞர்.





கவிஞர் இளையவன் சிவா

# தேசிக விநாயகம் பிள்ளை

கட்டுரை

### வாழ்க்கைக் குறிப்பு



கவிமணி தேசிக விநாயகம், குமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் சிவதாணுப்பிள்ளை - ஆதிலட்சுமி தம்பதியர்க்கு இரண்டு பெண் குழந்தைகளை அடுத்து மூன்றாவதாக 27 சூலை 1876 அன்று தேசிக விநாயகம் பிறந்தார். ஒன்பதாவது வயதில் தன் தந்தையை இழந்தார்.

எம். ஏ. படித்த கவிமணி பின் ஆசிரியர் பயிற்சி படித்து, தான் படித்த பள்ளியிலேயே ஆசிரியர் ஆனார். உமையம்மை எனும் பெண்ணை 1901இல் மணம் முடித்தார். நாஞ்சில் நாட்டார் தன் மனைவியை குட்டி, பிள்ளாய் என்று அழைத்து கொண்டிருந்த நாட்களில் கவிமணி தன் மனைவியை தாயி என்று மரியாதையுடன் அழைப்பார். குழந்தைப்பேறு இல்லாத கவிமணி தனது அக்காள் மகன் சிவதாணுவை தனது மகன் போல வளர்த்தார்.

### ஆசிரியர் பணி

நாகர்கோவிலிலுள்ள கோட்டார் ஆரம்பப்பள்ளி, நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மற்றும் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணிபுரிந்தார்.

### குழந்தை இலக்கியப் பணி

தமிழில் குழந்தைகளுக்காக முதன்முதலில் தொடர்ச்சியாகப் பாடல்களை எழுதினார். 1938 ஆண்டு வெளியான அவருடைய மலரும் மாலையும் தொகுதியில் 25 க்கும் மேற்பட்ட குழந்தைப் பாடல்கள், 7 கதைப் பாட்டுகள் இடம்பெற்றிருந்தது. தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு என்ற பாடல் இன்றளவும் பிரபலமாக உள்ள அவரது குழந்தைப் பாடல்களில் ஒன்று.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## மொழிபெயர்ப்பாளர்

எட்வின் ஆர்னால்டின் Light of Asia வைத் தழுவித் தமிழில் ஆசிய ஜோதியை எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்.

## ஆராய்ச்சியாளர்

ஆராய்ச்சித் துறையிலும் தேசிக விநாயகம் பிள்ளை பல அரிய பணிகளை ஆற்றியிருக்கிறார். 1922-இல் 'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதினார். சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராக இருந்தார். கம்பராமாயணம் திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்திருக்கிறார். 'காந்தளூர்ச்சாலை' பற்றிய ஆய்வு நூலை எழுதினார்.

## விருதுகள்


- 24 திசம்பர் 1940 இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை கவிமணி என்ற பட்டம் வழங்கினார்.
- 1943 இல் அண்ணாமலை அரசர் ஆத்தங்குடியில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பெரும் பொருள் வழங்க முன் வந்தபோது அதை வாங்க மறுத்து விட்டார்.
- 1954 இல் கவிமணிக்குத் தேரூரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டது. அக்டோபர் 2005இல் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

## கவிமணியின் நூல்கள்

- அழகம்மை ஆசிரிய விருத்தம்
- ஆசிய ஜோதி, (1941)

திரு அ. வில்சன், இதழாசிரியர்


### கவிமணியின் நூல்கள்




- அழகம்மை ஆசிரிய விருத்தம்
- ஆசிய ஜோதி, (1941)
- மலரும் மாலையும், (1938)
- மருமக்கள்வழி மான்மியம், (1942)
- கதர் பிறந்த கதை, (1947)
- உமார் கய்யாம் பாடல்கள், (1945)
- தேவியின் கீர்த்தனங்கள்
- குழந்தைச்செல்வம்
- கவிமணியின் உரைமணிகள்
- காந்தளூர் சாலை
- தோட்டத்தின் மீது வெள்ளை பசு

### மறைவு

கவிமணி இறுதிக்காலம் வரை புத்தேரி என்ற ஊரில் வாழ்ந்தார். செப்டம்பர் 26, 1954-ல் காலமானார்.



நாளை

# நமதே

## முயற்சி செய்ய தயங்காதே

## முயலும் போது முட்களும்

## உன்னை முத்தமிடும்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே                முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com